*TAMIL*

Toronto Catholic District School Board

செப்ரெம்பர் 19, 2006

அன்பான பெற்றோர்/ பாதுகாவலர்களே:

ரொறன்ரோ தொகுதி கத்தோலிக்க பாடசாலைகள் சபையுடனான ஒரு புதிய பாடசாலை ஆண்டுக்கு மீண்டும் நல்வரவு. எங்களுடைய புதிய பெற்றோர்/பாதுகாவலர்களே, எங்கள் குடும்பத்திற்கு நல்வரவு, கத்தோலிக்கக் கல்விக்கு உங்கள் அர்ப்பணிப்பிற்கு நன்றி, அது அன்பாக வரவேற்கப்படுகிறது.

எங்களுடைய புதிய, பொருளாதார நிலைமை பற்றி யூனில் எழுதியிருந்தோம். எங்கள் இறுதி வரவு செலவுத் திட்ட தற்போது கிடைத்த கணக்குப்படி, இந்த ஆண்டு $34.6 மில்லியன் பற்றாக்குறை இருக்குமெனத் தெரிகிறது. இது பிரதானமான அடிப்படை குறைபாடுகள், கொண்ட அரசாங்கத்தின் நிதி வாய்ப்பாட்டால்.

எல்லாவற்றிற்கும் முதலாக, இந்த ஆண்டு பாடசாலைக் குழுவையோ சேவைகளையோ குறைக்கக் கருதவில்லை. கலந்துரையாடல் நிகழும்வரை திட்டங்களைப் பாதுகாத்து, எங்கள் மாணவத் தொகைக்கு சேவையும் உதவியும், பொருத்தமான குழு மட்டங்கள், எப்பொழுதும் முதலிடம் பெறும்.

நிதியுதவி வாய்ப்பாட்டின்படி. நாங்கள் விசேட கல்வித் திட்டத்தில் $9 மில்லியன் வெட்டவேண்டும், அடுத்த ஆகஸ்ட் 31டில் ஒரு சமப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க. நாங்கள் மேலும் $10.4 மில்லியன் பாடசாலை இயக்கலிலும் பேணலிலும், $5 மில்லியன் ஆசிரியர்களுக்கு, $3மில்லியன் போக்குவரத்திற்கு. அறக்காப்பாளர் சபைக்கு இது ஏற்படையதாக இல்லை. மாணவர்களுடைய திட்டங்களையும் சேவைகளையும் இடருக்கு உட்படுத்தாது ஒர் தீர்வு காண நாங்கள் முயல்கிறோம்.

இப்பொழுது நடைபெறுவது இதுதான்

- புதிதாக நியமிக்கப்பட்டகல்வி மந்திரி மதிப்பிற்குரிய கத்லின் வைன் அவர்களை நாங்கள் வாழ்த்தி வரவேற்கிறோம்.
  கல்வியில் தீர்வு காணப்படாத பல பிரச்சினைகளுக்கு தீர்வு காண முயலும் எமது முயற்சியில் அவருடன் சேர்ந்த வேலை செய்யும் நாளை எதிர்பார்க்கிறோம்.
- ஒரு விசேட உதவிக் குழுவுடன் உடன் உழைக்க ஆகஸ்ட் 31, எல்லையின் பின்னும் முன்னாள் கல்வி மந்திரி ஒரு நீடிப்புத் தந்திருந்தார்.
- அந்தக்குழு, எங்கள் வரவு செலவுத்திட்ட, திட்ட விருப்பங்களின் நடைமுறைப் படுத்தக்கூடிய தன்மையை ஆராயும், சபைக்கும் அமைச்சுக்கும் எல்லா விளக்கமளிக்கக் கூடிய, வரவுசெலவு சார்ந்த விருப்புகளும் கணிக்கப்பட்டு உறுதியான ஒரு நேர எல்லையில் வரவு செலவுத் திட்டத்தை பதிவு செய்வதில் நம்பிக்கை தருவதற்கே.
- ஏதாவது குறைத்தல் தேவைப்படின், செலவினங்களை வரிசைப் படுத்தி கொடைகளுடன், குறைபாடுகளை, எங்கே என்று சுட்டிக் காட்டி, அந்தக்குழு, நிகழக்கூடிய தாக்கத்தைப் பற்றி கருத்துரையை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- அந்தக் குழுவிடம் முழுமையான மூலதனத் திட்டமும் ( ரொறன்ரோ தீர்வு) அதனால் நிகழக்கூடிய செலவுகளும். சேமிப்புக்களும் பற்றிய உயர் மட்டப் பகுப்பாய்வு ஒன்றினைத் தரும்படி அந்தக் குழுவிடம் கேட்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடல் நடைமுறை

அந்தக் குழுவின் அறிக்கையை நாம் பெற்றவுடன் எங்கள் அடுத்த நடவடிக்கை நிதிப்பிரச்சனைக்கு முகம் கொடுத்தல் பற்றிய மேலதிக தகவல்களை நாம் தருவோம். இந்தச் சபை அந்த நடைமுறை தொடர்ந்து கொண்டிருக்கும் போது, மேலதிக விபரத்தை உங்களுக்குத் தந்து ஆலோசிக்க இந்தச் சபை அர்ப்பணம் செய்துள்ளது. தயவு செய்து சபையின் இணையத்தளம் www.tcdsb.org வரவு செலவு புதியன பார்க்கவும் அல்லது அழையுங்கள்; 416 222 ext 2873 தகவல்கள் 24 மணி சேவை.

எங்களுக்கு முதன்மையானது TCDSB யின் உயர்மட்ட சேவையும் எமது மாணவர்களுக்கு பெறுமதியான கத்தோலிக்கக் கல்வி கொடுத்தலையும் பாதுகாத்தல். புதிய கல்வி ஆண்டு தொடங்கும் போது, ஒவ்வொருவருக்கும் ஒரு மிக வெற்றிகரமான ஆண்டு கிடைக்க எமது வாழ்த்துக்கள்.

Mary Cicogna

Mary Cicogna, Trustee Ward 4
mary.cicogna@tcdsb.org
416-512-3404